செய்தி வெளியீடு எண்–653 நாள்–10.10.2007

# மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் நெடுஞ்சாலைத்துறை பணிகள் குறித்து ஆய்வு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறையில் செயல்படுத்தப்படும் பல்வேறு பணிகளின் திட்டம் குறித்து இன்று (10.10.2007) ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வின்போது நெடுஞ்சாலைத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், நெடுஞ்சாலைத் துறைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு கடல்சார் வாரிய தலைமைச் செயல் அலுவலர் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டிலுள்ள அரசுச் சாலைகளை மேம்படுத்தி பராமரித்திட திட்டப் பணிகளுக்கு நடப்பு ஆண்டில் 2 ஆயிரத்து 625 கோடி ரூபாயும், பராமரிப்புப் பணிகளுக்கு 723 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் பல்வேறு திட்டங்களின் கீழ் செப்டம்பர் 2007 வரை 3 ஆயிரத்து 900 கிமீ நீளச் சாலைப் பணிகள் 600 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளதை ஆய்வு செய்ததுடன் தொடர்ந்து நடைபெற்று வரும் 1385 கோடி ரூபாய் செலவிலான 7200 கிமீ நீளச் சாலைப் பணிகளையும், புதுப்பிக்கப்பட்டுவரும் 1807 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 9000 கிமீ நீளச் சாலைப் பணிகளையும் மார்ச் 2008க்குள் மேம்படுத்தி முடிக்குமாறும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அறிவுரை வழங்கினார்.

ஒரகடம் தொழில் பூங்கா பகுதியில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான அறிவிக்கப்பட்டுள்ள சாலை மேம்பாட்டுச் சிறப்புத் திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக தற்போது அரசின் கைவசமுள்ள நிலப்பரப்பில் நான்கு வழித் தடச் சாலை அமைக்கும் பணிகளை தொடங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும்;

மேலும்,70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருப்பூர் நகரச் சுற்றுச்சாலை மற்றும் ஆரச் சாலைகள் மேம்பாட்டுப் பணிகளையும், 27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மாநகரில் அவினாசி சாலை ஆறு வழிச் சாலையாக அகலப்படுத்தும் பணிகளையும், மதுரை ஆரச் சாலைகள் திட்டத்தின் 71 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான இரண்டாம் கட்டப் பணிகளில் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளையும், 2007 டிசம்பர் மாதத்திற்குள் நிறைவேற்றி முடிக்குமாறும்;

அடையாறு மத்திய கைலாஷ் முதல் சிறுசேரி வரை செல்லும் 20 கிமீ நீள ராஜீவ் காந்தி சாலையினை ஆறு வழிச் சாலையாக அகலப்படுத்தும் பணிகளை விரைவாக

முடிக்குமாறும், சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள 600 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான சாலைப் பணிகள் மற்றும் பாலப் பணிகளில் முடிவடைந்துள்ள 240 கோடி ரூபாய் செலவிலான பணிகள் நீங்கலாக எஞ்சிய பணிகளை மார்ச் 2008க்குள் முடிக்குமாறும்;

கிழக்குக் கடற்கரைச் சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்றுவதற்கான திட்டம் குறித்த சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிக்குமாறும், வண்டலூார் முதல் பொன்னேரி பஞ்செட்டி சாலை வரை திட்டமிடப்பட்டுள்ள புதிய வெளி வட்டச் சாலையை செயல்படுத்துவதற்கும் துரித நடவடிக்கை எடுக்குமாறும்;

வடகிழக்குப் பருவமழை காலத்தை எதிர்நோக்கி சாலைகளைச் சீர்செய்து பாலங்கள் மற்றம் சிறு பாலங்களில் உள்ள அடைப்புகளை நீக்கி மழை நீர் எளிதாகச் செல்வதற்கு வழிவகை செய்யுமாறும்;. சுனாமி நிவாரணத் திட்டத்தின் கீழ் 140 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான சாலைப் பணிகளை துரிதப்படுத்தி முடிக்குமாறும் முதலமைச்சர் கலைஞர் அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

பொதுவாக சாலைப் பணிகளை விரைவுபடுத்தி, குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடிப்பதற்கு – ஒப்பந்தக்காரர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குதல், கட்டுமானப் பொருள்களுக்குச் சந்தை விலைகளை அனுமதித்தல் போன்ற அம்சங்களைப் பரிசீலனை செய்யுமாறு முதலமைச்சர் கலைஞர் அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வின் முடிவில், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் 775 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 39 இரயில்வே மேம்பாலங்களையும், கீழ்பாலங்களையும் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் நிர்வாக அனுமதி வழங்கினார்.

திட்டப் பணிகளின் ஆய்வுக்கு முன்பாக நெடுஞ்சாலைத் துறையின் பொறியாளர்களுக்காக 3 கோடியே 50 இலட்ச ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்டுள்ள 59 ஈப்புக்களையும் 21 சீருந்துகளையம் முதலமைச்சர் அவர்கள் ஓட்டுநர்களிடம் வழங்கினார்.

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் சார்பில் சிறுதுறைமுகங்களுக்கான புதிய கொள்கை விளக்கக் குறிப்பேடு ஒன்றையும் முதலமைச்சர் கலைஞர் வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் தமிழ்நாடு கடல்சார் வாரியம் 2006–07–ம் ஆண்டு சிறு துறைமுகங்கள் மூலம் ஈட்டிய வருவாயிலிருந்து தமிழக அரசுக்கு ஈவுத் தொகையாக ஒரு கோடி ரூபாய்க்கான காசோலையை நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் வழங்கினார்.

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.